கனடாச் செய்திகள்

# கனடிய மத்திய வங்கியின் வட்டி விகிதத்தில் மாற்றமில்லை

கனடிய மத்திய வங்கியின் வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை.

மத்திய வங்கி இந்த ஆண்டுக்கான தனது இறுதி வட்டி விகித முடிவை புதன்கிழமை (10) அறிவித்தது.

இதில் வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் மேற்கொள்வதில்லை என்ற முடிவை மத்திய வங்கி ஆளுநர் டிஃப் மேக்லெம் (Tiff Macklem) அறிவித்தார்.


இந்த நிலையில் மத்திய வங்கியின் வட்டி விகிதம் 2.25 சதவீதமாக உள்ளது.

மத்திய வங்கி இந்த வாரம் மீண்டும் வட்டி விகிதங்களை குறைக்காது என முன்னரே எதிர்வு கூறப்பட்டது.

இந்த ஆண்டு மத்திய வங்கி நான்கு வட்டி விகிதக் குறைப்புகளை ஏற்கனவே அறிவித்தது.

செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் வட்டி விகிதங்களை குறைக்கும் முடிவை மத்திய வங்கி அறிவித்தது.

இதற்கு முன்னர், அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் காரணமான நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில், மத்திய வங்கி அதன் முக்கிய வட்டி விகிதத்தை மூன்று தொடர்ச்சியான தடவைகளுக்கு 2.75 சதவீதமாக வைத்திருந்தது.




மத்திய வங்கி வருடத்திற்கு எட்டு முறை கூடி பணவியல் கொள்கை குறித்து விவாதிப்பதுடன், முக்கிய வட்டி விகித அறிவித்தலையும் வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.

LJI Reporter - சுசி பாலசிங்கம்

# இளவரசர் ஹரி- ஒன்ராறியோ முதல்வர் சந்திப்பு



இளவரசர் ஹரியுடன் (Harry)இரவு விருந்தில் பங்கேற்றதை ஒன்ராறியோ முதல்வர் உறுதிப்படுத்தினார்.

இவர்கள் இருவரும் கடந்த வாரம் ரொறன்ரோவில் சந்தித்தனர்.

ரொறன்ரோவில் இளவரசர் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற Ontario ரொறன்ரோப் பிராந்திய ஆதன வணிகச் சபை யின் (சபை (Ontario Real Estate Association (OREA) Realtors மாநாடு கடந்த வாரம் நடைபெற்றது.

டிசம்பர்1-ஆம் திகதி OREA மாநாட்டை நிறைவு செய்யும் முக்கிய பேச்சாளராக இளவரசர் ஹரி இருந்தார்

இந்த மாநாட்டின் பின்னர் இளவரசருடன் உணவருந்தியதாக டக் ஃபோர்ட் (Doug Ford) உறுதிப்படுத்தினார்.


இளவரசரை "மிகவும் பணிவானவர்" என முதல்வர் குறிப்பிட்டார்.

ரொறன்ரோப் பிராந்திய ஆதன வணிகச் சபை (Ontario Real Estate Association (OREA)) மாநாடு இளவரசரின் இரண்டாவது அண்மைய ரொறன்ரோ வருகையைக் குறித்தது.

நவம்பர் மாதம், தேசிய நினைவு தினத்திற்கு முன்னதாக, கனடிய ஆயுதப்படை உறுப்பினர்கள், முன்னாள் படைவீரர்களைச் சந்திக்க இளவரசர் ரொறன்ரோ வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

LJI Reporter - சுசி பாலசிங்கம்

# எதிர்க்கட்சியின் குழாய் திட்டம் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.



எதிர்க்கட்சியின் குழாய் திட்டம் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

புதிய அல்பேர்ட்டா குழாய் திட்டத்திற்கு நாடாளுமன்றம் தங்கள் ஆதரவை தெரிவிக்க வேண்டும் என கொன்சர்வேட்டிவ் தலைவர் பியர்பொலிவியர் (Pierre Poilievre) முன்வைத்த தீர்மானம் தோல்வியடைந்தது.

இந்தத் தீர்மானம் செவ்வாய்கிழமை (09) வாக்கெடுப்புக்கு வந்தது.

139-க்கு 196 என்ற வாக்குகளால் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியின் இந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

புதிய எரிசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கனடிய மத்திய அரசாங்கமும், Alberta மாகாண அரசும் கடந்த மாதம் கையெழுத்திட்டன.

பிரதமர் மார்க் கார்னி, அல்பேர்ட்டா முதல்வர் Danielle Smith ஆகியோர் இந்த ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் பிரிட்டிஷ் கொலம்பியா வழியாக எண்ணெய் குழாய் பாதைக்கு வழி வகுக்கிறது.

LJI Reporter - சுசி பாலசிங்கம்

# 2026 FIFA உலகக் கோப்பை - கனடா B பிரிவில் ரொறன்ரோ– கனடாவின் முதல் ஆட்டம் யூன் 12




2026 FIFA உலகக் கோப்பை தொடரில் கனடா B பிரிவில் ஆட தெரிவாகியுள்ளது.

அமெரிக்கா தலைநகரில் வெள்ளிக்கிழமை (05) நடைபெற்ற FIFA நிகழ்வின் ஒரு பகுதியாக பிரிவுகளும் குழு நிலை போட்டிகளும் அறிவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கனடிய பிரதமர் மார்க் கார்னிபங்கேற்றார்.

கத்தார், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட நாடுகளை கொண்ட பிரிவில் கனடா போட்டியிட தெரிவாகியுள்ளது.

இத்தாலி, வடக்கு அயர்லாந்து, வேல்ஸ், போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா (Wales, Bosnia and Herzegovina) ஆகிய அணிகள் பங்கேற்கும் ஐரோப்பிய அணிகளுக்கு இடையிலான போட்டியில் வெற்றி பெறும் அணியும் இந்த பிரிவில் பங்கேற்றும்.

ரொறன்ரோவில் கனடாவின் முதல் ஆட்டம் யூன் 12 -ஆம் திகதி ஐரோப்பிய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் வெற்றியாளருக்கு எதிராக நடைபெறும்.

இது கனடிய மண்ணில் நடைபெறும் முதல் FIFA உலகக் கோப்பை போட்டியாக அமையும்.

பின்னர் கனடிய ஆண்கள் தேசிய அணி யூன் 18 அன்று கத்தாருக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் விளையாட வான்கூவர் பயணமாகும்.

யூன் 24 அன்று சுவிட்சர்லாந்துடனான கனடிய அணியின் ஆட்டம் வான்கூவரில் நடைபெறும்.

கனடா தங்கள் குழுவில் முதலிடத்தை பிடித்தால், அவர்கள் 32 அணிகள் சுற்று, 16 அணிகள் சுற்று ஆட்டங்களை வான்கூவரில் எதிர்கொள்ளும்.

# வெளிநாட்டில் பயிற்சி பெற்ற மருத்துவர்களுக்கான புதிய “express entry” கனடிய அரசு அறிமுகப்படுத்துகிறது!



வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற மருத்துவர்களுக்கான புதிய குடியேற்ற நடவடிக்கைகளை கனடிய மத்திய அரசாங்கம் அறிவித்தது.

கனடிய மத்திய அரசாங்கத்தின் இந்த அறிவித்தல் திங்கட்கிழமை (08) வெளியானது.

குடிவரவு, அகதிகள், குடியுரிமை அமைச்சர் லீனா மெட்லேஜ் டயப் (Lena Metlege Diab) ஒரு செய்தியாளர் சந்திப்பில் இந்த அறிவித்தலை வெளியிட்டார்.

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற மருத்துவர்களுக்கான புதிய “express entry” பிரிவை மத்திய அரசாங்கம் அறிமுகப்படுத்துகிறது.

கனடாவில் சுகாதாரப் பணியாளர்களின் சவால்களை எதிர்கொள்ளும் முயற்சியாக இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஒரு வருட கனடிய பணி அனுபவத்தைப் பெற்ற சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற மருத்துவர்களை இந்தப் புதிய நடவடிக்கைகள் குறிவைக்கின்றன.

LJI Reporter - சுசி பாலசிங்கம்